# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 14 புதன்கிழமை (28.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 99







# செங்கலடியில் தற்கொலைத் தாக்குதல்

# இராணுவம் உட்பட எண்மர் உயிரிழப்பு

## 18 பேர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி இராணுவ முகாமை இலக்குவைத்து நேற்றுக் காலை 6.45 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் எட்டுப்பேர் உயிரிழந்துள்ளனர். 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதில் மூன்று இராணுவத்தினரும் மூன்று ஈ.பி.டி.பி.உறுப்பினர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டது. உழவு இயந்திரம் ஒன்றில் சென்ற விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையாளியே இத் தாக்குதலை மேற்கொண்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு மூலமான தீர்வுக்கு இணங்கப்போவதில்லை!

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ வெற்றிகளை பின்னோக்கித் தள்ளும் பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு ஒரு போதும் இணங்கப்போவதில்லை என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு எதிர்க்கட்சித்தலைவர் விடுத்துள்ள கோரிக்கைக்கு பிரதமர் தனது விசனத்தையும் வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் விமானங்கள் மூலம் சர்வதேசத்திற்கும் பெரும் அச்சுறுத்தல்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்க நாம் இணைந்து சகல சக்திகளையும் பயன்படுத்த வேண்டும். அந்த நடவடிக்கைகளுக்கு சகலரின் ஒத்துழைப்புக்களும் எமக்குக் கிடைக்கும் என்று நம்புகின்றேன். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசியல் லாபம் தேட நினைப்பது நாட்டிற்கும் இனத்திற்கும் செய்கின்ற தேசத்துரோகமான செயலாகும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்பிடம் விமானங்கள் இருப்பது குறித்து சர்வதேச சமூகத்திற்கு நாம் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளோம். புலிகளிடம் இருக்கின்ற யுத்த விமானங்கள் எமக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்திற்கே பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீது மேற்கொண்ட இலகு ரக விமானத்தாக்குதல்களை அடுத்து அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் சர்வகட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சியைத் தவிர பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற இதர 13 கட்சிகளும் கலந்து கொண்டு பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக அரசாங்கம் எடுக்கின்ற முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக இணங்கியுள்ளன. (04 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல்களைக் கண்டித்து நாளை கண்டனப் பேரணி

போர் அனர்த்தங்களாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் வாழ்வுப் பணிகளை முன்னெடுத்து வரும் மனிதநேய தொண்டு நிறுவனங்கள் மீதும் அதில் பணிபுரிகின்ற தொண்டர்கள் மீதும் நடாத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களையும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத் தலைமைகளின் பிரதிநிதிகளுடன் வெளிவிவகார அமைச்சர் அவசர சந்திப்பு

### விமானத் தாக்குதல் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

வெளிநாட்டு அமைச்சர் ரோகித போகொல்லாகம சர்வதேச இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களை நேற்று தனது வெளிநாட்டு அமைச்சில் அவசரமாக சந்தித்துப் பேசியிருக்கிறார். வெளிநாட்டுச் செயலாளர் பாலித கோஹன்ன உட்பட பல முக்கிய அரச பிரமுகர்களும் அமைச்சின் பிரதிநிதிகளும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல்களால் நாட்டின் பாதுகாப்பிற்கு எழுந்துள்ள அச்சுறுத்தல் குறித்து இந்த சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. இராணுவ கேந்திர நிலைகள் மீது எந்நேரத்திலும் தாக்குதல் நடத்தக்கூடிய வலுவை விடுதலைப் புலிகள் கொண்டுள்ளமை நாட்டின் அனைத்துப் பகுதிக்கும் அச்சுறுத்தலாக உள்ளது என்று (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடலில் துப்பாக்கிச் சத்தம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பருத்தித்துறை கடற்பகுதியில் நேற்றிரவு வெடியோசைகள் மற்றும் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

நேற்றிரவு 7.45 மணியளவில் காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பகுதியில் வெடியோசைகள்துப்பாக்கிச்சத்தங்கள் செவிமடுக்கப்பட்டுள்ளதாகவும்பரா வெளிச்சங்களும் காணப்பட்டதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ச)

## நாகர்கோவிலில் தாக்குதல் 5 புலிகள்,2இராணுவம் பலி

(கொழும்பு)

நாகர்கோயில் பாதுகாப்பு முன்னரங்க எல்லைப் பகுதியினுள் நுழைய முற்பட்ட ஐந்து விடுதலைப்புலிகளை படையினர் சுட்டுக்கொன்றுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

மேலும் 11 பேர் படுகாயமடைந்ததாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதன் பின்னர் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ரி.81 ரக துப்பாக்கி ஒன்றும் ரவைக்கூடு (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகளை சர்வதேசம் வழங்கவில்லை

### ஐ.நா.குற்றச்சாட்டு

இலங்கையில் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகின்ற போதும் சர்வதேச சமூகம் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவில்லை என உள்ளக இடப்பெயர்வுக்குள்ளானோரின் மனித உரிமைகளுக்கான ஐ.நா.செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி வோல்ட்டர் கலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவித்துள்ள சுவிஸ்சலாந்தின் சட்டத்துறை பேராசிரியரும் உள்ளக இடப்பெயர்வுக்குள்ளானோரின் மனித உரிமைகளுக்கான ஐ.நா.செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுமான (04 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா தாக்குதல் இரு விசாரணைக்குழு அமைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீது தமிழீழ வான்படையினர் நடத்திய தாக்குதல்களை விசாரணை செய்வதற்கு அரசாங்கம் இரு உயர்மட்ட விசாரணைக்குழுக்களை அமைந்துள்ளது.

ஏயர் வைஸ் மார்சல் பி.பி. பிரேமச்சந்திரா தலைமையிலான ஐந்து பேர் அடங்கிய விசாரணைக்குழுவை விமானப் படைத் தளபதி றொசான் குண (04 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா விமானத் தளத்திற்குச்செல்ல கண்காணிப்புக்குழுவுக்கு அனுமதி மறுப்பு

### அதன் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானத்தளத்தின் மீது விடுதலைப்புலிகளினால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான பகுதிகளைப் பார்வையிடுவதற்குச் சென்ற இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவை விமானப்படையினர் அனுமதிக்கவில்லை என கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்ததாவது; தாக்குதல் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதற்காக நாம் சென்றபோது விமானப்படை அதிகாரி எம்மைத் தடுத்துள்ளார். எனினும் நாம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.செயலகத்துக்கு முன்னால் இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியில் மாவட்ட செயலகத்திற்கு அருகில் நேற்று மாலை 4.30 மணியளவில் இளைஞன் ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளார். இச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் கச்சேரியடியைச் சேர்ந்த எஸ்.சந்திரநாத் (வயது 23) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

குறித்த இளைஞன் மினிபஸ் நேரக்கணிப்பாளராக பணி (04 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதலையடுத்து கொழும்பில் 40 தமிழர்கள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின்மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடத்திய விமானத் தாக்குதலைத் தொடர்ந்து தலைநகர் கொழும்பிலுள்ள 23 பொலிஸ் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 40 பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.கைதுசெய்யப்பட்ட அனைவரும் ஆண்கள் எனவும் மலையத்தைச் சேர்ந்த அவர்கள் தங்களின் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி முயற்சிகளை நிறுத்தி புலிகளுடன் போரிடவேண்டும்

### ஜே.வி.பி.வலியுறுத்தல்

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்பாடே விடுதலைப்புலிகள் விமானங்களை கொள்வனவு செய்வதற்கும் விமானப்படைத்தளம் மீது தாக்குதல் நடத்துவதற்கும் காரணமாக அமைந்தது. அரசாங்கம் தவறான அதிகாரப் பகிர்வு என்ற கொள்கைளை விடுத்து விடுதலைப்புலிகளை நசுக்க வேண்டிய தருணம் இதுவே என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பொறளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அரசாங்கம் ஒரு (04. ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிலைகள் மீது விமானப்படை தாக்குதல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது இரண்டாவது நாளாக நேற்றும் அரசாங்க விமானங்களால் குண்டு வீச்சுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கின்றது.

கனகராயன்குளம், சுடலைப்பிட்டி, கிழக்கே தொப்பிகல ஆகிய பகுதிகளில் நேற்று பிற்பகல் ஏககாலத்தில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## இந்திய அணி இரண்டாகப் பிரிகிறது

(புதுடில்லி)

உலகக் கிண்ணத்தில் படுதோல்வியடைந்த இந்திய அணி பல்வேறு மாற்றங்களை எதிர் நோக்கியுள்ளது. இனி இந்திய அணி, இந்திய சீனியர் மற்றும் இந்திய ப்ளு என இரண்டாகப் பிரிக்கப்படு கின்றது. மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியிலேயே வெளியேறி அதிர்ச்சியளித்துள் ளது. முன்னணி அணியான இந்திய அணியின் மோசமான தோல்வி பல் வேறு தரப்பினர்களையும் எரிச்சலுக்குள்ளாக்கியுள்ளது. இதன் காரணமாக அணியில் அதிரடி மாற்றங்களைக் கொண்டு வர இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளை விட்டு இந்திய அணி இன்னும்இரண்டு நாள்களில் நாடு திரும்பவுள்ளது. வீரர்கள் மற்றும் நிர்வாகிகள் வருகைக்குப் பின் ஏப்ரல் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் இந்திய கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டம் மும்பையில் நடக்கவுள்ளது. கூட்டத்தில் பல அதிரடி முடிபுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உலகக் கிண்ண இந்திய அணியின் செயற்பாடுகள் மிகவும் வருத்தமளித்துள்ளது என்றுகூறிய சரத்பவார் அணியில் அதிரடி மாற்றங்கள் செய் யப்படும் எனக் கூறியுள்ளார்.

இதுகுறித்து பவார் கூறியதாவது; உலகக் கிண்ண இந்திய அணியின் செயற்பாடுகள் குறித்து விரைவில் விவாதிக்கப்படும். அணியின் முகாமை யாளர் மற்றும் பயிற்சியாளரின் விரிவான விளக்கங்களின் அடிப்படையில் விசாரணை அமையும். மும்பையில் வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி நடக்கும் செயற்குழுக்கூட்டத்தில் கவாஸ்கர், கபில்தேவ் உட்பட முன்னாள் அணித் தலைவர்கள் பலர் கலந்து கொள்ள வுள்ளனர்.

இந்திய அணியை மேம்படுத்த தேவையான ஆலோசனைகள் குறித்து கடந்த கால சாதனை களின் அடிப்படையில் அவர்களது கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும். புதிய பயிற்சியாளரை நியமிப்பது குறித்து விரைவில் முடிபெடுக்கப்படும். மாற்றம் அவசியம் எனில் அப்பகுதிக்கு தகுதியானவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இந்தியக் கிரிக்கெட் அணி இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படவுள் ளது.

இந்திய சீனியர் மற்றும் இந்திய ப்ளு என இரண்டு அணிகளாக இந்தியா செயற் படும். இளம் வீரர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கி அவர்களது விரை வான வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கப் படும். வெளிநாட்டு ஆடுகளங்களில் இந்திய அணியின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை.

இதனால் இந்தியாவிலுள்ள ஆடுகளங்கள் உரிய அளவில் வெளிநாட்டுத் தரத்தில் மாற்றம் செய்யப்படும். வீரர்கள் தேர்வு குறித்து நான் தலையிட விரும்ப வில்லை. இருப்பினும் ஒவ்வொரு கிரிக்கெட் தொடரிலும் வீரர்களின் செயற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டும். குறையிருப்பின் மாற்றம் அவசியமாக்கப்படும்.இவ்வாறு சரத்பவார் கூறினார். (ச-5)



இந்திய வீரர்கள் இனி என்ன செய்வார்கள். ரசிகர்களின் இ-மெயில் கற்பனை.

அனுசரணை:-




## குழந்தைகளை தத்தெடுக்க ஏப்.2 இல் நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தின் பொறுப்பிலுள்ள 4 குழந்தைகளையும் தத்தெடுப்பது தொடர்பிலான விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் இடம் பெறவுள்ளதாக பதிவாளர் சோ.வைத்திய நாதபிள்ளை அறிவித்துள்ளார்.

மேற்படி நேர்முகத் தேர்வுக்கு அனைத்து விண்ணப்பதாரிகளும் அழைக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். திருமண ஆதாரங்கள், மருத்துவ சான்றிதழ்கள், சொத்து வழங்கல் தொடர்பான ஆதாரங்களுடன் தமது ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் நிழற் பிரதியுடன் சமுகம் தருமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் சோ. வைத்தியநாத பிள்ளை தெரிவித்துள்ளார். (ச-5)

## தந்தை செல்வாவின் 109-வது பிறந்த நாள் நிகழ்வு

தந்தை செல்வாவின் 109-வது பிறந்த நாள் மலரஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தந்தை செல்வா நினைவுத் தூபியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுத் தலைவர் வணபிதா. கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

## குடும்பஸ்தரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை வேலணைப் பகுதியிலிருந்து சாவகச்சேரி நுணாவில் பகுதிக்குப் புறப்பட்ட இளம்குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக உறவினர்களினால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வேலணை மேற்குப் பகுதியில் வசித்த கோபாலப்பிள்ளை இளங்குமரன் (வயது-27) என்ற குடும்பஸ்தரே காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் அடையாள அட்டைகள் ஒப்படைப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையின் வளாகத்தினுள் சிமியோன் கமலதாசன் என்பவருடைய கைப் பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளைகுறிப்பிட்ட தொகை பணமும் பல்வேறுபட்ட அடையாள அட்டைகளும் இருப்பதாக அவர் தெரிவித்தார்.உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனைத் தவிர பின்வருவோருடைய அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே இவற்றையும்உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

யோகராசா யுவனிதா (ஆறுகால்மடம்), தவமணி மார்க்கண்டு (அராலி மேற்கு), நாகமணி நல்லம்மா(ஈச்சமோட்டை), கமலக்கண்ணி கந்தசாமி (வட்டுக்கோட்டை மேற்கு), அன்ரனி பெர்னாண்டோ செல்வறாஜேஸ் (மண்டைதீவு), சிவலிங்கம் இரத்தினேஸ்வரி (நாயன்மார் வீதி), சந்திரராசா சரஸ்வதி(புளியங்கூடல்), வசந்தலிங்கம் தர்மராணி(மூளாய் கிழக்கு), சந்திராதேவி கிறிஸ்துராசா(பெரியவிளான்), சுப்பிரமணியம் சிவபாக்கியம் (தொல்புரம் மேற்கு), மலர் பாஸ்கரன்(புத்தூர்), தர்மநாயகன் வரலட்சுமி (நல்லூர்). (ச)

## நியமனம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் பிராந்திய பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவ பொதுச் சுகாதார பரிசோதர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் ஆகியோர்களுக்கு ஆளணி பற்றாக்குறை நிலவும் வைத்திய நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 42 பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்களுக்கும் 3 பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கடந்த 26 ஆம் திகதியிலிருந்து நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மாணவ பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து தற்காலிகமாக கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (ச)

ரகு போட்டோ டெக்னிக்
**இடமாற்றம்**

மிகச் சிறந்த முறையில் லமினேட் கண்ணாடி ஒட்டுமிடம். கோல்ட் கலர் ஒட்டிய பின்னும் அதே கலர். சில்வர் என்றால் அதே சில்வர். கறுப்பு நிறம் என்றால் அதே கறுப்பு நிறம். மாற்றமில்லாமல் ஒட்டு வேலை செய்து வந்த மேற்படி ஸ்தாபனம் தற்பொழுது முன்பிருந்த அதே கஸ்தூரியார் வீதியில் 187/6, கில்னர் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற இடத்தில் இயங்கி வருகின்றது. நாவலர் றோட் சந்திக்கு 20 யார் தூரத்தில் இந்த இடம் அமைந்துள்ளது. சு.நாராயணசுவாமி. (781)

## மருந்து வகைகளை பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க அதிபரின் உதவியுடன் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மருந்தகத்திற்கு ஒரு தொகுதி மருந்து வகைகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

மருந்துகள் தேவைப்படும் சகல மருந்தகங்களும், தனியார் வைத்தியசாலைகளும் தங்கள் பகுதி பிரதேச செயலரின் சிபார்சுடனும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடனும் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இளையோர் கணனி சேவை திறப்பு விழா வைபவம்

மாவட்ட தொழில்துறைத் திணைக்களத்தினால் கணனி திருத்துதல் சேவைக்கான இளையோர் கணனி சேவை திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு 15ஏ, சீனிவாசகம் வீதியிலுள்ள தொழிற்பயிற்சி மைய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தொழிற்துறைத் திணைக்கள யாழ். மாவட்ட அலுவலர் ப.ராகவன் தலைமையில் நடைபெறும்இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொள்கின்றார். (ச)

## 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு மார்ச் 30ற்கு முன் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இவ்வாண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்களை இம் மாதம் 30 ஆம் திகதி வரை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க முடியும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரசிங்க அறிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

பாடசாலைகளில் தற்போது தரம் ஐந்து வகுப்புக்களில் கல்வி பயின்று வருகின்ற சுமார் 3 லட்சத்து 10 ஆயிரம் மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெற்றுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்கள்ஏற்கனவே பரீட்சைத் திணைக்களத்தினால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உரிய அறிவுறுத்தலின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் கேட்டுள்ளார். (ச-3)

## மனித முகம் கொண்ட மீன் வலையில் சிக்கியது

(சிலாபம்)

சிலாபம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மனித முகம் கொண்ட 60 கிலோ எடையுள்ள மீன் ஒன்று மீனவர்களின் வலையில் சிக்கியுள்ளது.

இதற்கு வால் காணப்படவில்லை எனவும் சிறகுகள் இரு அடிகளைக் கொண்டதாகவும் காணப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். அம் மீனை கொழும்பு நாசா பரிசோதனை நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ச-5)

## தொழிற் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பயன்தரு வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நெறியின் கீழ் கணனி தட்டச்சு, வேர்ட், எக்ஸல் ஆகிய பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றன.

பாடசாலை கல்வியை முடித்த,பாடசாலையை விட்டு இடை விலகிய 18-30 வயதிற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புகின்றவர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன் விண்ணப்பிக்குமாறு யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ச)

## குறைகேள் அரங்கம்

### பாடசாலை சேவை நடைபெறுமா?

750 இலக்க பாதையூடாக அச்சுவேலியிலிருந்து யாழ்ப்பாணம் ஊடாக காலை 7 மணிக்குப் புறப்படும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பாடசாலைசேவை கடந்த 22 ஆம் திகதி முதல் நடாத்தப்படவில்லை. தினமும் பாடசாலைகளுக்குச் செல்லும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பஸ் தரிப்பு நிலையங்களில் தவம்கிடக்கின்றனர்.

பாடசாலைகளில் முதலாம் தவணைப் பரீட்சை நடைபெறும் போது மாணவர்கள் படும் அவதி பற்றி வட பிராந்திய போக்குவரத்துச் சபையினர் அறிய மாட்டார்களா? பாடசாலை சேவை நடாத்த முடியாதிருப்பின் இதுபற்றி முன்னறிவித்தலாவது கொடுக்கக் கூடிய நிலையில் குறித்த அதிகாரிகள் இல்லையா? பருவ காலச் சீட்டுக்களுடன் வீதிகளில் அலையும் மாணவர்களுக்கு பொறுப்பானவர்களே பதில் தாருங்கள்!

புத்தூர் க.தேவதாஸ்.

> அனுபவம் என்பது மனிதர்கள் தாங்கள் புரிந்த தவறுகளுக்கு இட்ட பெயராகும்.
>
> —அப்துர் ரஹீம்

வலம்புரி

## வலுப்படுத்தப்பட வேண்டிய சமாதானப் பாதை

நாடு முழுவதும் யுத்தத்தின் பிடிக்குள் சிக்குண்டுள்ளது. அரசியல்வாதிகள் தமது இலாபத்தைத் தவிர நாடு, மக்கள் என்ற எல்லைகளுக்குள் பிரவேசித்து அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் மன நிலையற்றவர்களாக உள்ளனர்.

சுயலாப அரசியலின் விளைவை நாடு இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. எங்கும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், கைது, காணாமல் போதல் என்ற திகில் சம்பவங்கள் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன.

அரசு தரப்பு ஆயுத படை பலத்தில் இலங்கையை பௌத்த சிங்கள நாடாகப் பிரகடனப்படுத்துவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளது.

இந்நிலைமை அச்சமற்ற மனித வாழ்வுக்கு ஏற்புடையதல்ல. எனவே இலங்கை மண்ணில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமாயின், அரசைத் தீர்மானிக்கும் மக்கள் நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த முன்வர வேண்டும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடென இலங்கைக்கான ஜெனீவாவின் தூதுவர் தயான் ஜயதிலக்க ஐ.நா. சபையில் கூறியுள்ளார்.

ஜனநாயக நாடு என்று கூறுவது மட்டும் ஜனநாயகத்தின் வரையறையல்ல. இலங்கை ஜனநாயக நாடெனில் அங்கு சம உரிமை இருத்தல் வேண்டும். பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

இலங்கையில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினை என்று கூறுவதால் பிரச்சினை தீர்ந்து விடாது. அரசின் பார்வையில் விடுதலைப் போராட்டம் பயங்கரவாதப் பிரச்சினையாகத் தென்பட்டாலும், அந்தப் பிரச்சினை ஏன் ஏற்பட்டது? அதற்கான காரணம் என்ன?

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழ முடியாமைக்கான காரணம் யாது? இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை வலுப்படுத்த முடியாதா? போன்ற கேள்விகளை எழுப்புவதும், அதற்கு அகிம்சை வழியில் தீர்வு காண்பதும் ஜனநாயகத்தின் பண்புகளாகும்.

ஆனால் இவை எதுவுமே இலங்கை அரசியலில் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக தமிழ் மக்களை விரோதிகளாகப் பார்க்கும் துரதிஷ்ட நிலையே காணப்படுகின்றது.

இதன் காரணமாகவே ஆயுதக் கொள்வனவு, தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீதான விமானக் குண்டுத் தாக்குதல் என்பன நடந்தேறுகின்றன.

இவை யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அரசியல்வாதிகள் - அரசில் அங்கம் வகிப்பவர்கள் பொறுப்புடன் கதைப்பதும் செயலாற்றுவதும் கட்டாயமானதாகும்.

இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சிங்கள மக்கள் எழுச்சி பெற வேண்டும். சிங்கள மக்கள் நினைப்பார்களாயின் அடுத்த கணத்தில் இந் நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த முடியும்.

இதற்காக அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் போருக்கும், இனவாதத்திற்கும் எதிராக எழுச்சி கொள்வதாகவேயிருக்கும்.

# கடத்தல், காணாமல் போதல் தொடர்பாக அரசு மீதான குற்றச்சாட்டு அடிப்படையற்றது

## ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடத்தல், காணாமல் போதல் மற்றும் மனிதப் படுகொலைகள் தொடர்பாக அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டுதல் அடிப்படையற்ற விடயமாகும் என்று மேற்படி சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி மஹாநாம திலகரட்ண தெரிவித்துள்ளார்.

கடத்தல், காணாமல் போதல் மற்றும் மனிதப் படுகொலைகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழுவின் இரண்டாவது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் அண்மையில் சமர்ப்பித்த போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள நிலையில் அவர்கள் காணாமல் போனதாக முறைப்பாடு செய்துள்ளதாகவும் தனிப்பட்ட தேவைகளுக்காக மறைந்திருந்து கொண்டு சிலர் காணாமல் போனதாக முறைப்பாடு செய்துள்ளதாகவும் மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கை மூலம் உறுதியாகியுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பாக ஆராய்ந்த இருவர் அடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-5)

# சர்வதேச ஊடகங்களின் பார்வையில் விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீது நேற்று முன்தினம் தமிழீழ வான்படை நடத்திய தாக்குதலானது அனைத்துலக ஊடகங்களின் அதிக கவனத்தை ஈர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்து.

கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது விடுதலைப்புலிகளின் வான்தாக்குதல் வலிமையையும் அரசாங்கத்தின் விமான எதிர்ப்புப் பிரிவின் பலவீனத்தையும் தெளிவாகக் காட்டியுள்ளதாக அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் தி ஏஜ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ரைம்ஸ் இதழில், அரசாங்கத்துடனான நீண்ட காலப் போரில் விடுதலைப்புலிகள் தமது முதலாவது வான் தாக்குதலை நடத்தியுள்ளனர். சிறிய ரக வானூர்தியின் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் மூன்று வான் படையினர் கொல்லப்பட்டதாக தெரியவருகின்றது என்றுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கிழக்கு மாகாணத்தைத் தாம் விடுவித்துள்ளதாகவும் மேலும் சில பகுதிகளே விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாக அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கும் போது, விடுதலைப்புலிகள் தமது வான்படை மூலம் தாக்குதலை நடத்தியுள்ளதாக அமெரிக்காவின் செய்தித் தளமான சி.என்.என். தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டுள்ள வான் தாக்குதலானது மிகவும் ஆபத்தானது. அவர்கள் மிகவும் பெறுமதி வாய்ந்த இலக்குகளைத் தாக்கலாம். இது விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு மிகப் பெரும் மன உறுதியை வழங்கியுள்ளது.

இந்தத் தாக்குதல் விடுதலைப்புலிகள் மீது இராணுவ நடவடிக்கையை அரசாங்கம் முடுக்கி விட்டுள்ள சமயம் நிகழ்ந்துள்ளது என ரைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் மீது குண்டு வீச்சுக்களை நடத்தி வந்த விமானப் படையின் கிபீர் மற்றும் மிக்-27 ரக விமானங்களைக் குறிவைத்து விடுதலைப்புலிகள் வான்தாக்குதலை நடத்தியதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாக அசோசியட் பிரஸ் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (எ-5)

# அரசாங்கத்தின் பொய்ப் பிரசாரங்களை விமானத் தாக்குதல் நிரூபித்துள்ளது

## எதிர்க் கட்சித் தலைவர் தெரிவிப்பு

அரசாங்கம் அண்மைக்காலங்களில் போரில் வெற்றி பெற்று வருவதாக அறிவித்திருந்தது. ஆனால் அது ஒரு தவறான தகவல் என்பதனை விடுதலைப்புலிகளின் வான் படையினால் கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீது நடாத்தப்பட்ட தாக்குதல் நிரூபித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் விடுதலையான மௌபிம பத்திரிகையின் ஊடகவியலாளர் முனுசாமி பரமேஸ்வரியை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமது சொந்த ஊடகத்துறைப் பணியாளருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பல ஊடகத்துறை அதிகாரிகள் அரசாங்கத்தை ஊக்குவித்து வருகின்றனர். அவர்கள் ஊடகவியலாளர்களாக இருத்தல் வேண்டும். அரசியல்வாதிகளாக அல்ல. ஊடகத்துறையின் உரிமைகளுக்கு எதிரான வன்முறைகளை அவர்கள் எதிர்க்க வேண்டும். போர் தொடர்பாக விமர்சனம் செய்யும் ஊடகவியலாளர்களை அரசாங்கம் கைது செய்து துன்புறுத்துவது தவறானது. பத்திரிகையாளர்களைக் கைது செய்வது ஊடகத்துறைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும்.

விடுதலைப்புலிகள் வான் தாக்குதல்களை நிகழ்த்தி விட்டுத் திரும்பிச் சென்ற பின்னரும் தாம் 95 வீதம் போரை வென்று விட்டதாக அரசாங்கம் எவ்வாறு கூறலாம்? கைது செய்யப்படும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் அப்பாவிப் பொதுமக்களே.

இதனால் அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையிடத்திலிருந்து அதிக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளது. அதற்கான எதிர்விளைவுகளும் ஏற்படலாம் என அவர் தெரிவித்தர். (ச)

# கட்டுநாயக்கா தாக்குதலுக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும்

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியமைக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டில் பாதுகாப்பான சூழ்நிலை காணப்படுவதாக அரசாங்கம் தெரிவித்து வரும் நிலையில் இத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது பாதுகாப்புக்கு விடுக்கப்பட்ட சவால் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரட்ணநாயக்க கூறியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர், நாட்டின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருப்பதாக தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னரே விமானங்கள் இருந்தமைக்கான சாட்சியங்கள் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு மிக்-27 ரக விமானங்கள் குறித்து தகவல்கள் வழங்கியுள்ளதாக அரசாங்கம் முன்னாள் அமைச்சர்கள் மீது குற்றஞ்சுமத்தியுள்ளது.

எனினும் பாதுகாப்பு தந்திரங்கள் குறித்த 2007ஆம் ஆண்டின் தெற்காசிய அறிக்கையில் முப்படை பற்றிய அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சகால ரட்ணநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (ச-3)

# முன்னாள் அமைச்சர் சிறிபதிக்கு விளக்க மறியல் மீண்டும் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராச்சியை எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். இதன் போது சிறிபதி சூரியாராட்சி சார்பில் கோரப்பட்ட பிணை மனுவை நீதிவான் நிராகரித்தார்.

அரசாங்க வாகனத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரகசியப் பொலிஸாருக்கு வாக்கு மூலம் அளிக்கச் சென்ற வேளையில் கடந்த 17 ஆம் திகதி சூரியாராட்சி கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் அவரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நேற்று அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது விளக்கமறியல் காலத்தை நீடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும் அவர் நாடாளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (ச-3)

# கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு தமிழ்நாட்டில் பாதுகாப்பு

(சென்னை)

இலங்கையில் விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலையடுத்து தமிழகத்தில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள இலங்கை விமானப்படைத் தளத்தின் மீது முதல்முறையாக விடுதலைப்புலிகள் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர்.தங்களது விமானப் படை தாக்குதலால் இந்தியாவின் பாதுகாப்புக்கு எவ்வித நெருக்கடியும் அச்சுறுத்தலும் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் தமிழகத்தில் கல்பாக்கம் அணுமின் நிலையம்,சென்னை, எண்ணூர், தூத்துக்குடி உள்ளிட்ட துறைமுகங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை, திருச்சி, கோவை, மதுரை உள்ளிட்ட விமான நிலையங்கள் உசார் படுத்தப்பட்டுள்ளன. செங்கல்பட்டு, புழல், ராமேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள அகதி முகாம்கள் கண்காணிக்கப்படுகின்றன.

கடலோரப் பகுதிகளில் உள்ள முக்கிய சோதனைச் சாவடிகளில் உச்சக்கட்ட எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்திய கடற்படையின் அதி நவீன கப்பல்கள் விரைவில் தமிழக கடலோரப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபடவும் மிகவும் தாழ்வாக பறந்து செல்லும் சிறிய ரக விமானங்களையும் துல்லியமாகக் கண்டறியும் அதி நவீன ராடர்களை நிறுவவும் வாய்ப்பிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ச-5)

## விடுதலைப்புலிகளின்...

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி தொடர்ந்து உரையாற் றுகையில் மேலும் கூறியதாவது;

விடுதலைப்புலிகளின் இலக்குகளை நாம் தெரிந்து வைத்திருந்தோம். அவர்கள் இராணுவத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முக்கியஸ்தர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

விடுதலைப்புலிகள் விமானம் மூலம் தாக்குதல் நடத்துவது எமக்கு மட்டுமல்ல; எமது நாட்டிற்கு மட்டுமல்ல; இதர நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

பயங்கரவாத அச்சுறுத்தல் எமது நாட்டுக்கு மட்டுமல்ல இந்தியா, இந்தோனேசியா உள்ளிட்ட பல நாடுகளுக்கும் இருக்கின்றன. பயங்கரவாத அச்சுறுத்தல்கள் வெவ்வேறு முறைகளில் காணப்படுகின்ற போதும் விடுதலைப்புலிகள் வசம் இருக்கின்ற யுத்த விமானங்கள் சர்வதேச ரீதியில் அச்சுறுத்தலாக அமையும்.

இந்த விமானங்கள் கொண்டு வரப்பட்டது எந்தக் காலத்தில் என்பது குறித்து நான் உங்களுக்கு தெளிவுபடுத்தவேண்டிய அவசியம் இல்லை என்றார்.

இதற்கு அனுமதி வழங்கியது யார்? அப்படி இல்லாவிட்டால் விமான நிலையங்கள் தொடர்பான தகவல்கள் அவர்களின் கைகளுக்கு எவ்வாறு சென்றன?

அது தொடர்பாக பதில்களை தேடி உங்களது காலத்தை வீணாக்க விரும்பவில்லை என்றார். (ச-3)

## பேச்சு மூலமான...

சிங்க தனக்கு அனுப்பிய கடிதத்தினை ஊடகங்களுக்கும் அனுப்பியமைக்கு தனது அதிர்ச்சியையும் வெளியிட்டுள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற சர்வதேச நாடகவிழாவிலேயே அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்துள்ளார். (ச-3)

## அமைதி முயற்சிகளை...

காலை அமைதி முயற்சிகளி லும் மறுகாலை விடுதலைப்புலிகளை தோற்கடிக்கும் நடவடிக்கையிலும் வைத்துள்ளது.

ஆனால், விடுதலைப்புலிகளை தோற்கடிக்கும் முயற்சியில் திடமான நடவடிக்கை தேவை. விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல் சரணடையப் போகின்றீர்களா? அல்லது சண்டையிட போகின்றீர்களா? என அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்ட செய்தியாகும்.

அரசாங்கம் அதில் சண்டையைத் தான் தேர்ந்தெடுக்கவேண்டும். இனப்பிரச்சினைக்கு போர் தீர்வாகாது என்ற அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களுக்கு தற்போது அரசாங்கம் பணியக்கூடாது.ஏனெனில் தற்போது சமர் உக்கிரமடைந்துள்ளது.

போர் நிறுத்த உடன்பாடே விடுதலைப்புலிகள் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு காரணமாக அமைந்தது. மேலும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உலங்கு வானூர்தி மற்றும் போக்குவரத்து வசதிகள் மூலம் அவர்கள் வானூர்தியின் உதிரிப்பாகங்களை வட பகுதிக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இதனைக் கருணாவும் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் உறுதிப்படுத்தியிருந்தார் எனத் தெரிவித்தார்.

இதனிடையே போர் எதிர்ப்பு அமைப்புக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் எல்லாவற்றையும் விடுதலைப்புலிகளின் நண்பர்களாகவே அரசாங்கம் கருதவேண்டும் என தேசிய பாதுகாப்புச் சபையின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளை தோற்கடிக்க படையினருக்கு முழு ஆதரவுகளும் வழங்கப்படவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
2007 A/L
CHEMISTRY
PHYSICAL
BY:-Mr. N.மகேஸ்வரன்
ஆரம்பம் :- 30.03.2007
(783) காலை 6.15 MON & FRI

இடமாற்றம்
சிறிமுருகன் ஜுவல்லறி
115,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிய எமது நிறுவனம் இன்று 28.03.2007 புதன்கிழமை முதல் புதிய கட்டடத்தில் 68, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
உரிமையாளர்
T.P:021 222 5965 (850) த.மணிவண்ணன்

பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வீடு தேவை
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைக்கு மேற்படி தேவைக்காக ஒரு வீடு தேவை. யாழ்.கிளை தலைமைக் காரியாலயத்திலிருந்து 1-2 கிலோ மீற்றர் தூரத்தில் அமைவது அவசியம். விபரங்களுடன் 03.04.2007ற்கு முன்னதாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இ.செ.ச.யாழ்.கிளை
(C-665)

## இலங்கையில்...

வோல்டர் கலின் மேலும் தெரிவிக்கையில், இடம் பெயர்ந்த மக்களை அரசாங்கம் பலவந்தமாக அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்புவதாக அங்கிருந்து கிடைத்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எனினும் அவ் அறிக்கைகள் உறுதி செய்யப்படவில்லை. இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் சர்வதேச மனிதாபிமான நடைமுறைகளையும் மனித உரிமைச் சட்டங்களையும் மதித்து நடக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

மீளக்குடியமர்த்தப்படும் மக்களின் பாதுகாப்பு உட்பட அடிப்படை மனிதாபிமான தேவைகளை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். (ச)

## தாக்குதல்களைக்...

படுகொலைகளையும் கண்டித்தும் அவற்றை உடனே தடுத்துநிறுத்தக்கோரியும் மாபெரும் கண்டனப்பேரணி ஒன்று நாளை காலை 10 மணியளவில் கிளிநொச்சியில் நடைபெறவிருக்கின்றது.

கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவகப் பணியகம் முன்றலிலிருந்து காலை 10 மணிக்கு முன்பாக அனைத்து மக்களும் ஒன்றுகூடி பேரணியாக யாழ்.வீதி வழியாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வளாகத்தைச் சென்றடைந்து,

அங்கு கண்டனக்கூட்டம் நடைபெற்று அரச அதிபருக்கும் இலங்கை ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவுக்கும் மனுக்கள் கையளிக்கப்பட விருக்கின்றன. (எ-3)

## இணைத் தலைமைகளின்...

போகொல்லாகம இச் சந்திப்பில் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு எடுத்துரைத்தார்.

அமெரிக்கத்தூதுவர் றொபேட் ஓ பிளக், ஐரோப்பிய ஒன்றியத்தூதுவர் ஜூலியன் வில்சன், ஜேர்மன் தூதுவரும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியுமான ஜேகர் வீர்த், யப்பானிய வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்கான தூதுவர் என். இட்டோ,நோர்வேத் தூதுவர் ஹான்பிறட்ஸ்கர் ஆகியோர் இந்த அவசர சந்திப்பில் கலந்து கொண்டனர். (ச)

## நாகர்கோவிலில் தாக்குதல்...

ஒன்றும் கண்டெடுக்கப்பட்டதாக ஊடக மையம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை நல்லூர் பகுதியில் சிவிலியன் ஒருவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல் ஒன்றின் அடிப்படையில் படையினர் யுத்த உபகரணங்கள் பலவற்றை மீட்டுள்ளதாக ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஆர்.பீ.ஜீ.ஒன்று, செய்மதி தொலைபேசி ஒன்று, இரண்டு கிளைமோர்கள், தூர இருந்து இயக்கும் கருவிகள் மற்றும் பற்றிகள் ஆகியவைகளையே படையினர் கைப்பற்றியுள்ளனர் என் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. முன்னரங்கப் பகுதி மீது தாக்குதல் நடத்துவதற்கு நேற்று பிற்பகல் 3.40 மணியளவில் இராணுவ அணி ஒன்று நகர்ந்து வந்த போது விடுதலைப்புலிகள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கி ஓடினர். இராணுவத்தினரிடம் இருந்து ரி.56 ரக துப்பாக்கி ஒன்று,ரவைக் கூடுகள் இரண்டு, நடுத்தர ரவைகள் 60 ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது என கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன. (எ-1,3)

## கட்டுநாயக்கா...

திலக்க நியமித்துள்ள அதே வேளை குற்றப் புலனாய்வுத் துறையும் தமது விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வும் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித் துள்ளார்.

எனினும் இந்த விசாரணைகள் தொடர்பாக மேலதிக தகவல்களை விசாரணைகள் முடிபடையும் வரை வெளியிடுவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## கட்டுநாயக்கா விமானத்...

நீர்கொழும்பு மருத்துவ மனைக்குச் சென்று காயமடைந்த விமானப் படையினரை பார்வையிட்டோம்.

நாம் விமானப்படைத் தளத்திற்குச் செல்ல முயற்சிகளை மேற்கொண்டோம். இச் சம்பவத்தின் விதிகளின்படி எமக்கு அனுமதிகள் அளிப்பது முக்கியமானது எனத் தெரிவித்தார்.

இதனிடையே போர் நிறுத்த உடன்பாட்டினால்தான் விடுதலைப்புலிகள் கிளிநொச்சியில் விமான ஓடுபாதையை நிர்மாணித்தனர் என ஊடகத்துறை அமைச்சர் அநுரா பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் அவர்கள் இலகு விமானங்களை கொள்வனவு செய்துள்ளனர். சில அரசியல்வாதிகளும் ஏனையோரும் மிக் 27 விமானக்கொள்வனவு தொடர்பான தமது தவறான தகவல்களை மூலம் அதனை அழிப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (ச-5)

## புலிகளின் நிலைகள்...

விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.புலிகளின் புலனாய்வு மையம், மோட்டார் மற்றும் எறிகணை வீச்சு நிலைகள் என்பன இந்தத் தாக்குதலின் மூலம் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்திருக்கின்றது.

விடுதலைப்புலிகள் கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் மீது நேற்று முன்தினம் நடத்திய வான் தாக்குதலினால் விமானப் படையின் தாக்குதல் வலிமை எந்தவிதத்தி லும் பாதிக்கப்படவில்லை என்பது இரண்டு நாள் தாக்குதல்களின் மூலம் புலப்படுத்தப் பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரி வித்துள்ளது. (ச-3)

## செங்கலடியில் தற்கொலைத்...

மட்டக்களப்பு செங்கலடி இராணுவ முகாம் மீது நேற்றுக் காலை 6.45 மணியளவில் தற்கொலைத் தாக்குதலொன்று இடம் பெற்றுள்ளதாக இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

தற்கொலைத்தாக்குதல் நடத்துவதற்கு சென்ற உழவு இயந்திரம் செங்கலடி இராணுவ முகாமுக்கு வெளியே வைத்து தடுக்கப்பட்டது. ஆனால் அதனைப் பொருட்படுத்தாத நிலையில் முகாமின் ஊடான பாதையில் பயணித்த உழவு இயந்திரம் திடீரென வாயில்படியை நோக்கிச் சென்றது.

இதனையடுத்து படையினர் அதன் மீது தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து உழவு இயந்திரத்தைச் செலுத்திச் சென்ற தற்கொலையாளி உழவு இயந்திரத்தை வெடிக்கவைத் தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல் சம்பவத்தின் போது மூன்று படையினரும் மூன்று ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்களும் மற்றும் ஈ.பி.டி.பி.உறுப்பினரின் உறவினரின் உறவு முறையான 12 வயதுடைய சிறுவன் ஒருவனும் கொல்லப்பட்டதுடன் ஐந்து படையினரும் இரண்டு பொலிஸாரும் ஈ.பி.டி.பி.உறுப்பினர்கள் ஐந்து பேரும் மற்றும் ஆறு பொதுமக்களுமாக 18 பேர்படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களை மட்டக்களப்பு மற்றும் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் இராணுவச் சிப்பாய் தவிர்ந்த 9 பேர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

காயமடைந்த இரண்டு பொலிஸாரும் பெண் ஒருவரும் குழந்தையும் உட்பட ஏழு பேர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக அவர் மேலும் கூறினார். (ச-3)

## யாழ்.செயலகத்துக்கு...

புரிவதாகவும் சம்பவ நேரம் பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் நின்ற போது ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டுதப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது.

படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் போது அவர் இடைவழியில் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-3,5)

## விமானத்...

அடையாளங்களை நிரூபிக்கத் தவறிவிட்டனர் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் பொலிஸாரும் படையினரும் கொழும்பு நகரத்தின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளதாகவும் பேருந்து தரிப்பிடம், புகையிரத நிலையங்கள், பாலங்கள் போன்ற பொது இடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கொழும்பு பிரதி பொலிஸ் ஆணையாளர் றொஹான் அபயவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-5)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
நீண்ட கால இடைவெளியின் பின்
இன்று முதல் (23.03.2007)
அல்டி மேட்ஸ்ரார் அஜித் (மூன்று வேடங்களில்)
அசின்,
ரமேஷ்கண்ணா
நடித்த
வரலாறு
தினசரி:- 10.30,2.00



இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.